1967 மார்ச் 29]

திரு. தோ. மு. நல்லசாமி : மனிதர்கள் இழுக்கக்கூடிய ரிக்ஷாக்களையும் சைகிள் ரிக்ஷாக்களையும் ஒழிக்க வேண்டுமென்கிறபோது, போக்குவரத்துக்கு அதிகமாக, அவசியமாகத் தேவைப்படுவதற்கு மாற்று யோசனையாக அரசாங்கத்திடம் என்ன திட்டம் இருக்கிறதென்று அறியலாமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : இது சம்பந்தமாக 1-4-1967க்குள் யோசனை தரும்படியாக போலீஸ் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் வந்தவுடன் சென்னைக்கு மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் என்ன மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

Abolition of hand-pulled rickhaws

* 5 *Q*.—Thiru. K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

Whether there is a proposal to completely abolish the plying of hand-pulled rickshaws in the city of Madras?

மதிப்பிற்குரிய திரு. மு: கருணாநிதி: உடனடியாக கை ரிக்ஷாக்களை அறவே அகற்றும் எண்ணம் அரசினர்க்கு இல்லை.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : உடனடியாக கை ரிக்ஷாக்ஸ்டேஜ் பை ஸ்டேஜாக எடுத்துவிட வேண்டுமென்பது பழைய அரசாங்கத்தின் கொள்கை. கை ரிக்ஷாக்களைவிட சைகிள் ரிக்ஷா கொஞ்சம் மேலானது. கை ரிக்ஷாக்களை ஒழிக்கிறபோது சைகிள் ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : இந்த இரண்டு கருத்துக்களும் இருக்கிற நிலைமைக்கேற்றபடி கவனிக்கப்படும்.

குடி நீர்த் திட்டம்.

*6 கேள்வி.—திரு. சோ. அழகர்சாமி : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டி நகரத்துக்கான குடி தண்ணீர்த் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கோவில்பட்டி நகராட்சிக்கான குடிநீர் வழங்கு திட்டம் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தற்காலிக நிவாரணமாக நகரசபையிலிருந்து 2 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக சாங்ஷன் செய்து, நிறைவேற்றி நிவாரணம் அளிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.